22 DEC 2022
கோவை-1

014148
26.12.2022.

தலைமைப் பொறியாளர் அலுவலகம்
நீர்வளத் துறை
கோயமுத்தூர் மண்டலம்
கோயமுத்தூர் - 641 001

| | |
|---|---|
| த. பொ. | |
| து.த.பொ. | |
| ஆ.அ. | |
| த.வ.தொ.அ. | |


**சுருக்கம்**

பணியமைப்பு - நீர்வளத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ச.ராஜபிரபு, த/பெ.காலஞ்சென்ற திரு. M.சக்திவேல் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - 09.03.2020 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நீர்வளத்(பி1) துறை**

அரசாணை (3ப) எண்.84

நாள் : 15.12.2022
சுபகிருது, கார்த்திகை – 29,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் எண். ஆ1(2)/கோ.278(5199)/2022, நாள் 31.05.2022 மற்றும் 19.10.2022.

-----

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், பொதுப்பணித்துறையில் குன்னூர் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தில் காவலராக பணிபுரிந்து வந்த திரு. M.சக்திவேல், 29.01.2013 அன்று காலமானதை அடுத்து, அவரது மகனான திரு. ச.ராஜபிரபு என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் நீர்வளத்துறை பொள்ளாச்சி ஆழியார் வடிநிலக் கோட்டம் செயற்பொறியாளர் அலுவலகத்தில் 09.03.2020 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்று தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 09.03.2020 பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கிடுமாறு நீர்வளத்துறை, கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு. ச.ராஜபிரபு பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத்துறையில் கருணை அடிப்படையில், இளநிலை

உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 09.03.2020 பிற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு தனியரின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத்தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா. எண்.17812/ட்டி.1/2022-1, நாள் 25.11.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா. எண்.3617809/ஜி /2022, நாள் 09.12.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:-

தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் - 1.
திரு. ச.ராஜபிரபு, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, கோயம்புத்தூர் மண்டலம்,
கோயம்புத்தூர் - 1 வழியாக)

நகல்:-

மாநில கணக்காயர், சென்னை - 18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
16/12/22